# ?????. ?????????? 10 ???? ????????? ????????????? ?????? ??????? ?????!



மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 10 வயது சிறுமிக்கு கையடக்க தொலைபேசியில் ஆபாச படத்தை காட்டி பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட 21 வயது இளைஞர் ஒருவரை நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்துள்ளதாக வவுணதீவு பொலிசார் தெரிவித்தனர் .

குறித்த சிறுமியின் தந்தையார் வெளிநாட்டில் வேலைவாய்பு பெற்று அங்க பணியாற்றிவரும் நிலையில் தாயாருடன் வாழந்துவரும் குறித்த சிறுமியை சம்பவதினமான நேற்று தனிமையில் இருந்தபோது அங்கு சென்ற இளைஞன் சிறுமிக்கு தனது கையடக்க தொலைபேசியிலுள்ள ஆபாச படத்தை காட்டி சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமி தயாரிடம் தெரிவித்ததையடுத்து அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த 21 வயது இளைஞனை கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இளைஞனை இன்று (புதன்கிழமை) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

---

# ????.??????????????? ??????? ??? ?????? ?????????





யாழ்.கோப்பாய் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் ஒருவர் காணாமல்போயுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாயை சேர்ந்த 51 வயதான மாணிக்கம் ஜெயக்குமார் என்பவரை நேற்று 28.09.21 காலை 6.00 மணி தொடக்கம் காணவில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். காணாமற்போகும் போது இவர் (டி-சேர்ட் மற்றும் கிரே கலர் சோட்ஸ்) அணிந்து இருந்தார் என்றும், இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை உடற்பயிற்சிக்கு சென்ற வேளை காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவரை கண்டால் 0779498025, 0772836495 மற்றும் 0777948389 இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.